Asian Journal of Innovative Research 3(1) 13-16 (2018)

ISSN 2455 7285

ASIAN JOURNAL OF INNOVATIVE RESEARCH
Available online at http://www.asianjir.com

பெறப்பட்டது 02 ஜனவரி 2018
ஏற்கப்பட்டது 12 ஜனவரி 2018
இணையதளம் ஜனவரி 2018

*சம்பந்தப்பட்டஎழுத்தாளர்
முனைவர் க. சித்ரா,
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி
ஒரத்ததநாடு, தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு,
இந்தியா.

**ஆராய்ச்சி கட்டுரை** **தமிழ்த்துறை**

# பொருநராற்றுப்படையில் இசைக்கருவிகள்

முனைவர் க. சித்ரா *

**சுருக்கம்**

இசை என்னும் சொல் ‘இயை’ என்னும் வேர்ச்சொல்லினின்றும் பிறந்தது இசைதல் என்பது சேருதல் பொருந்துதல், ஒன்றாதல் எனப் பொருள்படுவன. “இயைபே புணர்ச்சி” (தொல்- உரி.12) என்னும் தொல்காப்பிய நூற்பாவால் இயைதல் என்பதன் பொருளாக உள்ளன.இசைக் கருவிகளை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். ஒன்று குழல், யாழ் போன்ற பண்ணிசைக் கருவிகள். அடுத்து பறை, தண்ணுமை, முழவு போன்ற தாளவிசைக் கருவிகள். தொல்காப்பியருக்கு இத்தகைய கருவிகளைப் பற்றித் தனியாக விளக்கிப் கூற வேண்டிய தேவை அவருடைய இலக்கண நூலில் ஏற்படவில்லை. ஆனால் ஐவகை நிலத்தின் கருப்பொருளைப் பற்றிக் கூறும்போது ஒவ்வொன்றுக்கும் உரிய யாழ், பறை முதலியவற்றைக் கூற வேண்டியுள்ளது. பழந்தமிழர் இசையை வாயாலும் இசைக் கருவிகளாலும் இசைத்து வந்தனர். தமிழர் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அதாவது பிறப்பு முதல் இறுதி வரை இசையும் இன்பமும், நகமும் தசையும் போல் இரண்டறக் கலந்து விளங்குகிறது. இசையின்பத்தைத் தரும் இசைக்கருவிகளாக தோற்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக்கருவிகள், கஞ்சக்கருவிகள், மிடற்றுக்கருவிகள் எனப் பலவகையான இசைக்கருவிகளை மக்கள் பயன்படுத்தினர் என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. இதில் இசைக்கருவிகள் பொருநராற்றுப்படையில் பயன்படுத்தப்பட்டுள்ளதை பாடல் வரிமூலம் அறியமுடிந்தது.

**முக்கிய வார்த்தைகள் :**

***சான்று:*** க. சித்ரா (2017). பொருநராற்றுப்படையில் இசைக்கருவிகள். *Asian Journal of Innovative Research* 3(1): 13-16.

## முன்னுரை

இசை என்னும் சொல் ‘இயை’ என்னும் வேர்ச்சொல்லினின்றும் பிறந்தது இசைதல் என்பது சேருதல் பொருந்துதல், ஒன்றாதல் எனப் பொருள்படுவன. “இயைபே புணர்ச்சி” (தொல்- உரி.12) என்னும் தொல்காப்பிய நூற்பாவால் இயைதல் என்பதன் பொருளாக உள்ளன.

## இசைத்தொழில்:

இசைக் கருவிகளை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். ஒன்று குழல், யாழ் போன்ற பண்ணிசைக் கருவிகள். அடுத்து பறை, தண்ணுமை, முழவு போன்ற தாளவிசைக் கருவிகள். தொல்காப்பியருக்கு இத்தகைய கருவிகளைப் பற்றித் தனியாக விளக்கிப் கூற வேண்டிய தேவை அவருடைய இலக்கண நூலில் ஏற்படவில்லை. ஆனால் ஐவகை நிலத்தின் கருப்பொருளைப் பற்றிக் கூறும்போது ஒவ்வொன்றுக்கும் உரிய யாழ், பறை முதலியவற்றைக் கூற வேண்டியுள்ளது.

தொல்காப்பியத்தில் நிலங்களின் கருப்பொருகளாகப் பலவற்றைக் குறிப்பிடுகின்றார்.

"தெய்வ முணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ
இவ்வகை பிறவும் கருவென மொழிப"
(தொல் - பொருள்-964)

இந்நூற்பாவில் தாளவிசைக் கருவியாக பறையும், பண்ணிசைக் கருவியாகிய யாழும் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம்.

தனித்தனி நிலத்துக்குரிய இசைக் கருவிகளை நம்பியகப் பொருள் தனித்தனியாகத் தெளிவாகக் கூறுகின்றது. குறிஞ்சிக்குத் தொண்டகப் பறையும், குறிஞ்சி யாழும் ஆகும். பாலைக்குத் துடியும், பாலை யாழும் உரியன. முல்லைக்கு ஏறு கோட்பாறையும், முல்லை யாழும் உள்ளன. மருதத்துக்கு நெல்லரிகிணையும், மணமுழவும் தாளக் கருவிகள், மருதயாழ் பண்ணிசைக் கருவியாக உள்ளது. நெய்தலுக்கு மீன்கோட்பறையும், நாவாய்ப் பம்பையும் தாளக் கருவிகள். விளரியாழ் பண்ணிசைக் கருவி. இடத்துக்கும் அவற்றின் வாழ்வியலுக்கும் ஏற்றவாறு கருவிகள் அமைந்து உள்ளது.

நிலங்களுக்கு உரிய பண்களும் உள்ளன. குறிஞ்சிக்கு குறிஞசிப் பண்ணும், பாலைக்குப் பஞ்சுரமும், முல்லைக்குச் சாதாரியும், மருதத்துக்கு மருதப்பண்ணும், நெய்தலுக்கு செவ்வழிப் பண்ணும் உரியனவாகும்.

எவை எவை பொருந்துவது இசையாகும்."சருதி பண், தாயம், பாடற்பொருள், பாடற்சொல், பண்ணின்சுவை முதலியன ஒன்றுடன் ஒன்றும் ஒன்றுடன் பலவும் பொருந்துவது இசை",இதை வாழ்வியல் களஞ்சியம் மூலம் புலப்படுகிறது.

இசையியல் என்பது அறிவியல் ஆய்வு முறையியல் கற்கும் துறை ஆகும். இது இக்காலத்தில் ஒரு தனித்துறையாக அமைந்துள்ளது. இசைப்புலவர்கள், இசைக்கருவிகள், இசைவகை, இசைக்குறியீடு போன்றவைகள் இசைத்துறையில் உள்ளன.

"பிரெடரிக் கிரிசாண்டர் என்னும் செருமானிய இசை வல்லுநர் கி.பி.1863 இல் இசையியல் என்னும் சொல்லை முதன் முதல் உருவாக்கினார்" என்பதை வாழ்வியல் களஞ்சியம் மூலம் **அறியலாம்.**

தமிழ் மொழியை இயல், இசை, கூத்து என மூன்று வைப்படுத்தி முத்தமிழ் எனப் பழந்தமிழ் மக்கள் அழைத்தனர். எனவே தமிழ்மொழி வரலாற்றில் இசை ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகிறது. இசைக்கு மயங்காதவர்கள் யாரும் இருக்க முடியாது. தாவரங்களின் அருகில் இன்னிசை ஒலிக்கும் போது கூட அவைகள் விரைவில் வளர்கின்றன என விஞ்ஞானிகள் ஆராய்ந்து கண்டறிந்து உள்ளனர். சுருங்கச் சொன்னால் எல்லா உயிர்களும் இசையொலியைக் கேட்டு இன்புற்று அதன் வயப்படுகின்றன.

**இசைக்கருவிகள்:**

உலகில் ஒலிஎழுப்பக் கூடிய எப்பொருளையும் இசைக் கருவியாக்க முடியும். ஆனால் இசையோடு தொடர்பு கொண்ட கருவிகள் மட்டும் இசைக்கருவிகள் எனப்படுகின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து மனிதர்கள் பல்வேறு இசைக்கருவிகளைப் பயன்படுத்தி வந்தனர்.

**முரசு:**

முரசு என்பது பெரிய உருவில் அமைந்த கொட்டாகும். குடைந்த மரத்தாலும் பரந்த கண்ணை முடியுள்ள தோலாலும் இறுக்கிக் கட்டப்பெற்ற தோல் வாராலும் முரசு செய்யப்பட்டிருக்கும். காளையின் தோலால் அமைக்கப்பட்ட பல்வேறு முரசுகள் என்று வழங்கின. போர் முரசு புனிதமாகக் கருதப்பட்டது

"முரசு முழங்கு தானை, மூவருங்கூடி" (பொரு ந.54)

**தடாரி:**

தடாரி, வட்ட வடிவினையும், ஆமை போன்ற முகத்தினையும் கொண்ட தோல் கருவியாகும். அடியார்க்கு நல்லார் குறிப்பிலிருந்து இக்கருவி 'கிணை' என்ற பெயரிலும் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. இதுபடம் விரித்த பாம்பினது பொறியை ஒத்திருந்தது.

"பைத்த பாம்பின் துத்தி யேய்ப்ப,
கைக்கசடு இருந்தஎன் கண்அகன் தடாரி"
(பொரு ந.69 – 70)

**துடி:**

துடி என்பது உடுக்கை ஆகும். இதன் நடுப்பகுதி சிறுத்தும் ஓரங்கள் பெருத்தும் இருக்கும். இதன் உடல் மரத்தினால் செய்யப்பட்டிருக்கும். இதுவொரு தோற்கருவியாகும். தோல்களின் சுற்றுப் பக்கத்தில் சிறு துவாரங்கள் இருக்கும். இவைகளின் மூலமாக ஒரு நீண்ட கயிறு இரு முகங்களினின்றும் மாறிமாறி இறுகப் பின்னப்பட்டிருக்கும். இந்தக் கயிற்றைச்சுற்றி நடுவில் ஒரு நாடா இருக்கும். வாசிப்பவர் இந்த நாடாவை அழுத்துவதால் முகங்களின் சுருதி அதிகமாகும். இக்கருவியைக் கொட்டுவோன் 'துடியன்' என்று அழைக்கப்பட்டான் யானைக் கன்றுகளின் அடிகன் துடியின் கண்களுக்கு உவமையாகக் கூறப்படுகிறது.

"துடியடி யன்ன தூங்குநடைக் குழவியொடு"
(பொரு ந.125)

என்னும் பாடல் வழி அறியலாம்.

**முழவு:**

முழவைப் பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் மிகப் பலவாகக் கிடைக்கின்றன. இதுவும் தண்ணுமை போன்ற ஒரு கருவியாக இருந்திருக்க வேண்டும். இதன் அமைப்பும் தன்மையும் தண்ணுமைக் கருவியைக் போன்று தற்கால மத்தளத்துடன் ஒப்புமையுடையதாக இருக்கின்றன. இவ்விரு கருவிகளின் நயங்களும் கூடிக் கலந்து மத்தளம் உருவாகும் வழியாக அமைந்திருக்கலாம். முழக்கம் என்ற சொல்லின் பொருளைக் முழவுக்கு பெயர் அமைந்திருக்கலாமா என்று கருத வேண்டியுள்ளது.

தோற்கருவிகள் முழவு, "வன்மை, மென்மை, சமம், முதல், இடை, கடை, உத்தமம், மத்திமம், அதமம், நாள், காலம், வீரம், அகம், அகப்புறம், புறம், புறப்புறம், பன்மை என்றும் பதினேழு முறைமைகள் உடையதாகும்" என்று வாழ்வியல் களஞ்சியம் கூறுகின்றது.

முழவு ஆடவரின் திரண்ட தோளுக்கு இது உவமையாகக் கூறப்பட்டது. இக்கருவியைக் குச்சியாலும், கைகளினாலும் முழங்குவர். இதன் ஒரு புறத்தில் ஒரு வகை மண் அமைக்கப்படும். இன்னோசைக்கு இதுவே காரணமாகும்.

"மண்ணமை முழவு" (பொரு ந.109)

**பறை:**

தாளவிசைக் கருவிகளில் பறை மிகவும் அதிகமாகப் பேசப்படுகிறது. பறை என்பது மக்களுக்குச் செய்திகளை அறிவிக்கும் கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டு 'அறைபறை யன்னா சொல்லின்ன' என்று

இன்னாநாற்பதில் கூறப்பெற்றுள்ளது. அடக்கமின்றி செய்திஅறிவிக்கும் பறை போன்று எல்லோரிடமும் பேசிக் கொண்டு திரிவோரின் சொல் தீமையானது. இவ்வடியின் குறிப்பு பறை அறைதற்கு உரியது. அதைக் குறுந்தடியால் தாக்கி அறைந்து இசையெழுப்புவர். இதை பண்டையத் தமிழரின் ஐந்திணைப் பாகுபாட்டின் கருப்பொருள்களுள் ஒன்றாகப் பறை வழங்கி வந்தன.

"அரிச்சிறுபறை, கொடும்பறை, கடும்பறை, பன்றிப்பறை, பொருநர்பறை, அரிக்கோற்பறை, கறங்குபறை, சிறைப்பறை, மென்பறை, ஆறெறிப்பறை என்பன போன்ற சொற்கள் சங்க நூல்களிலும், காப்பியங்களிலும் இடம் பெற்றுள்ளன." இசையும் இலக்கியமும் என்னும் நூலின் மூலம் அறியலாம்.

பறை தோற்கருவியைச் சார்ந்ததாகும் செய்திகளை ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்குத் தெரிவிக்கப்பயன்பட்டது. கொள்ளையர்களின் வருகை, நிகழ்ச்சிகள், அரசர்களின் ஆணைகள் போன்ற செய்திகள் பறை மூலம் அறிவிக்கப்பட்டன.

யானைகள் செல்லும் பொழுது அவற்றின் வருகையை அறிந்து மக்கள் ஒதுங்குவதற்கும் பறையறைதல் வழக்கமாக இருந்துள்ளன. அப்பறை ஒசை யானையின் வருகையை நினைவூட்டி அச்சத்தைத் தோற்றுவித்தது.

"வெரூஉப் பறைநுவலும் பரூஉப்பெருந் தடக்கை"
(பொரு ந.171)

### யாழ்:

யாழ்மரபிற் பண்டைக்காலத்திலிருந்த வில்யாழ், அதியாழ், சீறியாழ் போன்றவை பஞ்சமரபுக்காலம் (அல்லது) அதற்கு முன்னர், அவற்றின் பயன்பாடுகளுக்கேற்ப நன்கு திருத்தம் பெற்றுப் பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டுயாழ் என்று நான்காக உள்ளன. இவை நரம்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டன என்றும் அறியமுடிந்தது.

சீறியாழ்:

சீறியால் சங்க காலத்தில் பெருவழக்கிலிருந்த ஒரு பழமையான கருவியாகும். சீறியாழின் திருத்தமடைந்த யாழே செங்கோட்டு யாழ் என்றறியப்பட்டது. இது பேரியாழுக்கு எதிர்மறையான பொருள் கொண்டது. அதாவது சிறிய யாழ் என்னும் பொருளுடையது. இதில் பயிலப்பட்ட நரம்புகளின் எண்ணிக்கை இலக்கியக் குறிப்புகளிலிருந்து அறிந்து கொள்ள முடியவில்லை யாழ்களில் பலவித பண்கள் பாடப்பட்டுள்ளன.

"பண்ணமை சீறியாழ்" (பொரு ந.109)

பண்ணாலே பொருந்திய 'சிறிய யாழ்' என்று குறிப்பிடப்படுகிறது.

### யாழ் உறுப்புகள்:

ஓர் யாழ் இசைக்கப்படுவதற்குப் பொருத்தப்படும் உறுப்புகள் 'யாழ் உறுப்புக்கள்' எனப்பட்டது.

### பத்தல்:

'குடம்' போன்று அமைந்த ஓர் உறுப்பு ஆகும். இது பத்தல் அல்லது கலம் என்றும் கூறப்படும். இதுவொரு பாத்திரம் போன்ற நீர் இறைக்குஞ்சால் "இது குடத்தையொத்த அமைப்பினை உடையதால் தற்காலத்தில் இவ்வுறுப்பு குடம் அல்லது பானை என்று வழங்கப்படுகிறது." பஞ்கமரபில் இசை மரபு என்னும் நூலின் வழியறியலாம். இதன் மேற்பகுதி இருமருங்கும் தாழ்ந்தும், நடுவிடம் உயர்ந்தும் இருக்கும்படி இரு பிளவுகளை இணைத்திருத்தலால் மானின்கால் சுவடுக்கு உவமையாகக் கூறப்பட்டது.

"குளப்புவழி யன்ன கவடுபடு பத்தல்" (பொருந.4)

### போர்வை:

பத்தலை மூடிய ஓர் உறுப்புப் போர்வை ஆகும். இது பச்சை என்றும் கூறப்படும்.

"விளக்கழ லுருவின் விசியுறு பச்சை"
(பொரு.ந.5)

என்பது யாழில் விசித்துப் போர்க்கப்பட்ட தோல், விளக்குச் சுடரின் நிறத்திற்கு உவமை ஆகும்.

"பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை"
(பொருந.8)

இரண்டு தலைப்பையும் இணைத்துத் தைத்த மரத்தை மூடுவதற்கு அமைந்த உறை போர்வை எனப்பட்டது.

### ஆணி:

ஆணி என்னும் உறுப்பு இருவகையான பொருளைக் குறிக்கிறது. இவற்றில் ஒருவகை நுண்துளைகளில் இருத்தப்பெறும் சுள்ளாணிகளாகும். இவை பத்தலையும் போர்வையையும் சேர்த்து வலிமை பெற இறுக்கப்படுவதனால் இவை முடுக்கும் தன்மையினைப் பெறாது. மற்றொரு வகை ஆணிகள் திறந்து விளங்கப்பெறும் துளைகளில் அமையப்பெற்று அத்துளைகளின் திறப்பைமூடி மறைத்து விளங்குமேயொழிய அத்துளைகளில் வலிமை பெற இறுக்கப்படுவன அல்ல. எனவே, இவை முடுக்கும் தன்மை பெற்றவை ஆகும். இவற்றில் இரண்டாவதாகக் குறிப்பிட்ட ஆணியைத்,

"துளைவாய் துார்ந்த துரப்பமை யாணி"
(பொருந.10)

என்னும் பாடல்வரி கூறுகின்றது.

### கோடு:

கோடு என்னும் உறுப்பு வரி அல்லது மரக்கொம்பு எனப் பொருள்படும். இவ்வுறுப்பு தற்போது வீணை தம்புரா போன்ற இசைக்கருவிகளில் தண்டி என்னும் பெயருடன் காணப்படுகிறது. பாம்பு படமெடுத்தாற் போன்று தலை துாக்கி நிற்கும் அமைப்பினையும், இவ்வுறுப்பு "மருப்பு" என்னும் பொருண்மையில் அழைக்கப்படுவதையும் அறியலாம்.

"பாம்பணந் தன்ன ஓங்கிரு மருப்பின்"
(பொருந.13)

### திவவு:

திவவு என்னும் உறுப்பு நரம்புகளை யாழில் கோட்டுறுப்பில் அமைவுறக் கட்டும் வார்க்கட்டுகள் ஆகும். கரிய நிறமாகிய கோட்டின் மீது கட்டப்பட்ட திவவானது, கரிய நிறமுடைய பெண்ணின் கையில் அணியப்பட்ட வளையல் போல இருந்தன. இதை

"மாயோன் முன்கை ஆய்தொடி கடுக்கும்
கண்கூ டிருக்கைத் திண்பிணித் திவவின்"
(பொருந.14-15)

என்னும் பாடல் வரியால் அறியலாம்.

### நரம்பு:

நரம்பு என்னும் உறுப்பு யாழில் இசை எழுப்பக் கட்டப்பட்டு இருக்கும் ஓர் உறுப்பு ஆகும். இது சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. இது ஆகுபெயராகச் சுரங்களுக்கு அமையும்.

"வேய்வை போகிய விரலுளர் நரம்பிற்
(பொருந.17)

விரலால் இசைக்கின்ற நரம்பு என்பதாகும்.

பழந்தமிழர் இசையை வாயாலும் இசைக் கருவிகளாலும் இசைத்து வந்தனர். தமிழர் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அதாவது பிறப்பு முதல் இறுதி வரை இசையும் இன்பமும், நகமும் தசையும் போல் இரண்டறக் கலந்து விளங்குகிறது. இசையின்பத்தைத் தரும் இசைக்கருவிகளாக

தோற்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக்கருவிகள், கஞ்சக்கருவிகள், மிடற்றுக்கருவிகள் எனப் பலவகையான இசைக்கருவிகளை மக்கள் பயன்படுத்தினா் என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றுகினறன. இதில் இசைக்கருவிகள் பொருநராற்றுப்படையில் பயன்படுத்தப்பட்டுள்ளதை பாடல் வரிமூலம் அறியமுடிந்தது.

***கருத்து வேற்றுமை: எதுவும் அறிவிக்கப்படவில்லை***

***ஆதாரமாக பயன்படுத்துவது;***


*1. வாழ்வியல் களஞ்சியம்-தொகுதி 5.*

*2.* ***அகப்பொருள் விளக்கம்,***
*முனைவர் ச. திருஞானசம்பந்தர்.*

*3.* ***இசையும் இலக்கியமும்,***
*முனைவர் இ. அகங்யற்கண்ணி.*

*4.* ***பஞ்சமரபில் இசை மரபு,***
*முனைவர் இ. அகங்யற்கண்ணி.*

*5.* ***பத்துப் பாட்டில் பொருநர் ஆற்றுப்படை****,*
*முனைவர் அ. மா. பரிமணம்*
*முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன்.*